**MINUTES OF THE PUBLIC HEARING MEETING OF M/S. THIRU. K KALISAMY ROUGH STONE AND GRAVEL QUARRY, S.F. NO. 409/1B2, 409/2 AND 409/3, MOODUTHURAI VILLAGE, METTUPALAYAM TALUK, COIMBATORE DISTRICT IN AN AREA OF 1.73.0 HECTARE HELD ON 28.05.2025 AT 11.00A.M. IN COMMUNITY HALL, MEENAMPALAYAM, MOODUTHURAI VILLAGE, METTUPALAYAM TALUK, COIMBATORE DISTRICT**

| | | |
|---|---|---|
| **NAME OF THE PROJECT** | - | **M/s. THIRU. K KALISAMY ROUGH STONE AND GRAVEL QUARRY,**<br>S.F. No. 409/1b2, 409/2 and 409/3,<br>Mooduthurai Village,<br>Mettupalayam Taluk,<br>Coimbatore District |
| **VENUE** | - | Community Hall, Meenampalayam,<br>Mooduthurai Village, Mettupalayam Taluk,<br>Coimbatore District |
| **DATE & TIME** | - | 28.05.2025 – 11.00 A.M. |

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. K. Senthilvadivu | Special District Revenue Officer, (LA)<br>State Highways,<br>Coimbatore District. |
| 2. | Er. V. Swaminathan | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 3. | Er.D. Pricilla | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Coimbatore North |
| 4. | Thiru. Sureshkumar | Special Assistant Inspector,<br>Sirumugai Police Station,<br>Mettupalayam Taluk,<br>Coimbatore District |
| 5. | Thiru. K. Kalisamy | The Project Proponent |

| | | |
|---|---|---|
| 6. | Thiru. Sheik Nawas | EIA Consultant,<br>Geo Exploration and Mining Solution,<br>Salem District. |
| 7. | Public | 48 Nos. (Enclosed in Annexure - II) |

The public hearing meeting had started with Tamil Thai Vazhthu.

**<u>District Environmental Engineer, TNPCB, CBN:-</u>**

- The District Environmental Engineer has welcomed one and all present here. Public hearing meeting is proposed for the rough stone and gravel quarry project by M/s. Thiru. K Kalisamy Rough Stone and Gravel quarry.
- The Union Ministry of Environment's Notification states that public hearings are required for certain industries or projects. Accordingly, a public hearing meeting is being held today in Mooduthurai village, Mettupalayam taluk, regarding the establishment of the proposed rough stone and gravel quarry project.
- I request the Special District Revenue Officer, (LA) State Highways to preside over this public hearing meeting.
- I am proud to extend a warm welcome to the Public of Mooduthurai Village, Social Welfare Activists & Environmentalists who have gathered here for the public hearing meeting of M/s. Thiru. K Kalisamy Rough Stone and Gravel quarry Project on behalf of the Tamil Nadu Pollution Control Board.
- Press release regarding public hearing meeting was published on 23.04.2025 in "Daily thanthi" and "The New Indian Express" newspapers. Pamphlets regarding the venue of the public hearing meeting were also distributed to the public.
- First, the project consultant will provide information regarding the project. Following that, the public will express new opinion on the project.
- These comments will be recorded and sent in video and audio form to the State Environmental Impact Assessment Authority.
- Now, the project consultant will explain the project in brief.

**Thiru. Sheik, EIA Consultant of M/s. Geo Exploration and Mining Solution, Salem**

Thiru. Sheik, EIA Consultant of M/s. Geo Exploration and Mining Solution, elaborated the environmental impacts of the project, the measures to avoid them, the fund allocated for it and the benefits to be derived from the project

The District Environmental Engineer invited the public to express their views and suggestions on the project.

**1. Mr. C.Raja, Meenampalayam**

I would like to express my gratitude to the government officials, the quarry owners and the public who have come to the meeting to seek public opinion. My name is Raja, former Panchayat President. By giving permission to this quarry, you are providing a lot of employment opportunities to the public. Not only that, funds are also available for the development of the Panchayat through this quarry. Through this, the basic facilities required by the village can be provided through this fund. The livelihood of the people of this village depends on this quarry. Due to the lack of rain, this quarry is the only source of livelihood for the people and it is very useful for us. Thank you.

**2. Mr. P.A. Mayilsamy**

I would like to welcome the officer on behalf of the Muduthurai Panchayat. Kalisamy is a good man, a good cultured man, simple man. Although his quarry is near our land, we have no objection as he is using it in a good manner. We have a land with SF No. 418 near his quarry and he is using it for us in a good manner without any problem. I request you to approve this.

**3. Mr. M.Gandhi, Meenampalayam**

I am Former Vice President Gandhi. And has no objection to granting license for this quarry.

**4. Mr. G. Anandan,Chinnakallipatti**

Hello everyone, my name is Anandan. There is no problem with the upcoming quarry. We fully agree because if the quarry comes, it will increase employment opportunities for the people here. They will do good things for the nearby schools. I fully agree with the issue of license to the quarry. If the government considers this and finds that there is no harm to the public, they can definitely give permission for the quarry.

**5. Mr. Palanichamy, Pudhukuttai**

Sir, I am an agricultural labour. It is registered to obtain permission from you. Many people like me are working there and living because of the quarry operations. Keeping this in mind, please kindly grant permission to this quarry, which will provide employment opportunities to many people like us.

**6. Mr. K.Arunkumar, Pukkankuttai**

Hello everyone, he has been doing this quarrying business near my place for many years. Hence, I have not affected in any way. He has not done anything wrong like polluting the environment. He has also provided employment to many people in our surrounding area. So there is no objection to issue him a license.

**7. Mr. M. Murugesan kariyapalayam**

No objection to grant license.

**8. Thiru. S.Chandran Kariyapalayam**

Greetings to the district revenue officer who is presiding over this meeting and to everyone. Tamil Nadu Agricultural Association, Coimbatore. He has not sought new permission for this quarry business which he is running a quarry for almost 25 years, for six times. He has been operating it at the same place. There is no bus stand, school or place of worship at that place. In short, there is not even a panchayat road there. Moreover, there are no government offices or any other buildings within a 300 meter distance. The surrounding areas are agricultural lands. He has been doing this business for the past 25 years without any harm or disturbance to the public. Therefore, there is no objection to granting permission for this quarry. Since he has been operating this quarry with a license for almost 25 years at these places SF No. 409/1,409/2,409/3., there have been no incidents, accidents or any cases at the police station at these places. Moreover, the farmers around that quarry have gone to work in that quarry during no work in agricultural times and earned their livelihood. Therefore, I have no objection to granting permission for this quarry. I request you to issue a license to operate a quarry as soon as possible.

**9. Thiru. Mayilsamy kariyampalayam**

We have no problem with this quarry. They have been doing this business for many years. There is no danger to us. It is safe for us to drive vehicles, to and from agricultural farms, and no disturbance to sheep and cattle. There has been no safety problem so far. We have no objection to giving him a license.

**District Environmental Engineer:**

Thank you everyone. Thank you all for your participation. Petitions submitted by the public will be forwarded to the State Level Environment Impact Assessment Authority along with the meeting proceedings.

On behalf of the District Administration and the Pollution Control Board, I would like to extend our gratitude to the environmentalists and the general public for sharing their views during this public consultation. We also appreciate the support of the District Revenue Officer in convening this meeting, as well as the assistance of the police department, all participating officers, journalists, and Pollution Control Board officials.

Thank you once again.

**Annexure:-**

No. of Petitions – 5 Nos.

2/6/25

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board,**
**Coimbatore North**

02/06/2025

**Special District Revenue Officer (LA)/**
**State Highways,**
**Coimbatore District**

28.05.2025 அன்று காலை 11.00 மணி அளவில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மூடுதுறை கிராமத்தில் அமைந்துள்ள சமுதாயகூடம், மீனம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மூடுதுறை கிராமம், க.ச.எண். 409/1B2, 409/2 409/3 –ல் 1.73.0 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள தி/ள்.திரு. K. காளிசாமி சாதரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்கான பொது மக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கை விபரங்கள்:–

| | | |
|---|---|---|
| திட்டத்தின் பெயர் | : | தி/ள்..திரு. K. காளிசாமி சாதரண கல் மற்றும் கிராவல் குவாரி,<br>க.ச.எண். 409/1B2, 409/2 AND 409/3,<br>மூடுதுறை கிராமம்,<br>மேட்டுப்பாளையம் வட்டம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| நிகழ்விடம்: | : | சமுதாயகூடம்,<br>மீனம்பாளையம்,<br>மூடுதுறை கிராமம்,<br>மேட்டுப்பாளையம் வட்டம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| நாள் &நேரம் | : | 28.05.2025 – காலை 11.00 மணி |

பங்கேற்றோர் :

| | | |
|---|---|---|
| 1 | திருமதி. க.செந்தில்வடிவு, | தனி மாவட்ட வருவாய் அலுவலர்<br>நில எடுப்பு,<br>மாநில நெடுஞ்சாலை,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 2 | திரு. வ. சுவாமிநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>கோயம்புத்தூர் வடக்கு. |
| 4 | திரு. த. பிரிசில்லா | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், கோவை வடக்கு அலுவலகம் |
| 5 | திரு. சுரேஷ்குமார் | சிறப்பு உதவி ஆய்வாளர்,<br>சிறுமுகை காவல் நிலையம்,<br>மேட்டுப்பாளையம் வட்டம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம் |
| 6 | திரு. K. காளிசாமி | திட்ட உரிமையாளர் |

| | | |
|---|---|---|
| 8 | திரு.ஷேக் நவாஸ் | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம் மாவட்டம். |
| 9 | பொது மக்கள் | 48 (இணைப்பு II–ல் உள்ளபடி) |

கருத்து கேட்பு கூட்டம் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது.

## மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:–

- அனைவருக்கும் வணக்கம். திரு. K. காளிசாமி சாதரண கல் மற்றும் கிராவல் குவாரி திட்டத்திற்காக பொதுமக்களுடைய கருத்து கேட்பு கூட்டம் நடக்க உள்ளது.
- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தினுடைய சுற்றறிக்கையின் படி குறிப்பிட்ட தொழிற்சாலைகள் அல்லது திட்டங்களுக்கு, பொது மக்களுடைய கருத்து கேட்புக் கூட்டம் இன்றியமையாது என்று சொல்லப்பட்டுள்ளது.
- அதன்படி, இந்த சாதாரண கல் குவாரி திட்டத்திற்கு, பொது மக்களிடையே கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளதால், திரு. K. காளிசாமி சாதரண கல் மற்றும் கிராவல் குவாரி அமைவதற்கு, பொது மக்களுடைய கருத்துக் கேட்புக் கூட்டம் மூடுதுறை கிராமம், மேட்டுப்பாளையம் தாலுக்காவில் இன்று நடைபெறுகிறது.
- இந்த பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தை தலைமை தாங்கி நடத்தித் தருமாறு மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.
- இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்ய உள்ள பொதுமக்கள் மற்றும் விவசாய பெருமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அனைவரையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.
- இந்த கருத்து கேட்புக் கூட்டம் நடக்கவுள்ளது சம்பந்தமாக 23.04.2025 அன்று 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'தினசரி தந்தி' ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், பொது மக்களை சந்தித்து அவர்களுக்கு துண்டு பிரசுரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

❖ முதலில் திட்ட அலுவலர் அவர்கள், இந்த திட்டத்தை பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுவார்கள். அதன் பின் பொதுமக்கள் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம்.

❖ இந்த கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு வீடியோ மற்றும் ஆடியோ வடிவிலும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும்.

❖ எனவே, பொதுமக்கள் அனைவரும் அவர்களுடைய கருத்துக்களை பதிவு செய்யலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

❖ முதலில் திட்ட ஆலோசகர் அவர்கள் இந்த திட்டத்தை பற்றி சுருக்கமாக விளக்குவார்கள்.

## திரு.ஷேக், சுற்றுச்சூழல் ஆலோசகர், ஜியோ எக்ஸ்புளோரேசன் அண்டு மைனிங் சொல்யூஷன்ஸ், சேலம்

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டறிக்கை பற்றி திரு.ஷேக், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆலோசகர், ஜியோ எக்ஸ்ப்லொரேஷன் & மைனிங் சொல்யூஷன்ஸ்,சேலம் மாவட்டம் அவர்கள் நிழல்படம் மூலம், செயலாக்கப்படவுள்ள இத்திட்டத்தின் சுற்றுச் சூழல் தாக்கங்கள், அவற்றைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகள், அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மற்றும் இத்திட்டத்தின் மூலம் பெறப்படவுள்ள நன்மைகள் குறித்துவிரிவாக எடுத்துரைத்தார்.

இதன் பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொதுமக்களை இத்திட்டம் குறித்த கருத்துக்களை தெரிவிக்குமாறு அழைப்பு விடுத்தார்.

## பொதுமக்களின் கருத்துகள்:-

### 1. திரு. C. ராஜா மீனம்பாளையம்

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் அரசு அதிகாரி அவர்களுக்கும், குவாரி உரிமையாளர் அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.என்பெயர் ராஜா முன்னாள் ஊராட்சி மன்றதலைவர் நீங்கள் இந்த குவாரிக்கு அனுமதி

தருவதன்மூலம் பொதுமக்களுக்கு நிறைய வேலை வாய்ப்புகிடைக்கிறது, அதுமட்டும் இல்லாமல் பஞ்சாயத்து வளர்ச்சிக்கு நிதியும் இந்த குவாரியின் மூலம் கிடைக்கின்றது. இதன் மூலம் ஊருக்கு தேவையான அடிப்படை வசதிகளை இந்த நிதியின் மூலம் செய்துதர முடிகின்றது. இந்த ஊர் பொதுமக்களின் வாழ்வாதாரம் இந்த குவாரியை நம்பி உள்ளது. மழை இல்லாதகாரணத்தினால் இந்த குவாரி மட்டுமே மக்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. எங்களுக்கு மிகவும் உபயோகமாகவும் உள்ளது நன்றி.

2. **திரு. பி.ஏ.மயில்சாமி**

அதிகாரி அவர்களுக்கும் முடுதுறை ஊராட்சி சார்பாக வருக வருக என வரவேற்கிறேன். காளிச்சாமி என்பவர் நல்லமனிதர், நல்லபண்பாடு உள்ளவர் சாதாரணமான மனிதர் இவருடைய கல்குவாரி நமது பூமிக்கு அருகிலேயே உள்ளது, இருந்தாலும் இவர் நல்லமுறையிலேயே பயன்படுத்துவர் என்பதால் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை அவருடைய கல்குவாரி அருகிலேயே 413 காரை நம்முடையது அவர் எந்தவித பிரச்சனையும் இன்றி நல்லமுறையில் எங்களுக்கு செய்வார் என்பதால் நீங்கள் இதற்கு ஒப்புதல் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. **திரு. எம் காந்தி மீனம்பாளையம்**

நான் காந்தி முன்னாள் வைஸ்பிரசிடெண்ட் இந்த குவாரிக்கு லைசன்ஸ் கொடுப்பதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

4. **திரு.ஜி ஆனந்தன், சின்ன கள்ளிப்பட்டி**

அனைவருக்கும் வணக்கம் என் பெயர் ஆனந்தன், குவாரி வருவதால் எந்த பிரச்சினையும் இல்லை எங்களுக்கு முழு சம்மதம். ஏனென்றால், குவாரி வந்தால் இங்கு உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரிக்கும். அருகில் உள்ள பள்ளிகளுக்கு நல்ல விஷயங்களை செய்வார்கள். எனக்கு குவாரி வருவதில் முழு சம்மதம். அரசாங்கம் இதை பரிசீலனை செய்து பொதுமக்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிந்தால் கண்டிப்பாக குவாரிக்கு அனுமதிதரலாம்.

5. **திரு. பழனிசாமி, புதுக்குட்டை**

ஐயா நான் விவசாயக்கூலி, குவாரி லைசன்ஸ் பெறுவதற்காக பதிவு செய்து உங்களிடம் அனுமதி கோருகிறார்கள். என்னைப் போல நிறையமக்கள் அவரிடம்

வேலை செய்து வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறோம் இதை மனதில் கொண்டு எங்களைப் போல பலருக்கு வேலைவாய்ப்பை தரும் இந்த குவாரிக்கு தாராளமாக அனுமதி தரலாம்

## 6. திரு. அருண்குமார், புக்கன்குட்டை

அனைவருக்கும் வணக்கம், எனது இடத்திற்கு அருகில்தான் பலவருடங்களாக இவர் இந்த குவாரி தொழிலை செய்து கொண்டிருக்கிறார். அதனால் எனக்கு எந்த பாதிப்பும் இல்லை. சுற்றுச்சூழல் மாசு ஏற்படுவது போல் எந்த தவறும் செய்யவில்லை. அதுபோல், எங்கள் சுற்று வட்டார பகுதியில் நிறைய நபர்களுக்கு வேலைவாய்ப்பும் இதன்மூலம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். அதனால் அவருக்கு லைசென்ஸ் அளிப்பதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

## 7. திரு.எம் முருகேசன், காரியாபாளையம்

லைசன்ஸ் தரலாம் ஆட்சேபனை இல்லை.

## 8. திரு. எஸ்.சந்திரன், காரியாபாளையம்

இந்தக் கூட்டத்தை தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கும் வருவாய் கோட்டாட்சியர் மற்றும் அனைவருக்கும் வணக்கம். தமிழ்நாடு விவசாய சங்கம் கோயம்புத்தூர். இவர், இந்த குவாரி தொழிலுக்காக புதிதாக அனுமதி கோரவில்லை கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக அதாவது ஆறுமுறை அதே இடத்தில் நடத்திக் கொண்டுள்ளார். அந்த இடத்தில் ஒரு பேருந்து நிலையம் பள்ளியோ வழிபாட்டுதலங்களோ அந்த இடங்களில் இல்லை. சுருக்கமாக கூற வேண்டும் என்றால் ஒரு பஞ்சாயத்து சாலைகூட அங்கு இல்லை, அதுபோக 300 மீட்டர் தொலைவில் ஏதும் அரசு அலுவலகங்களோ வேறு எந்த கட்டிடங்களோ இல்லை. சுற்றி உள்ள இடங்கள் விவசாயம் நிலங்களே. இதுவரை, கடந்த 25 ஆண்டுகளாக எந்த பாதிப்புகளும் இல்லாமல் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் இல்லாமல் இந்த தொழிலை செய்து கொண்டுள்ளார். ஆதலால் இந்த கல்குவாரிக்கு அனுமதி தருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை 409/1,409/2,409/3. இந்த இடங்களில் கிட்டத்தட்ட 25 வருடங்களாக இவர் லைசென்ஸ் பெற்று இந்த குவாரியை நடத்தி வருவதால் அந்த இடங்களில் இதுவரை எந்தவித அசம்பாவிதங்களை விபத்துகளோ அல்லது காவல்

நிலையத்தில் ஏதும் வழக்குகளோ இல்லை. மேலும் அந்தக்குவாரியை சுற்றியுள்ள விவசாயிகள் விவசாயம் இல்லாத சமயங்களில் அந்தக்குவாரியில் வேலைக்குச் சென்று தங்களது வாழ்வாதாரத்தை நடத்திக் கொண்டுள்ளார்கள். ஆதலால் அவருக்கு விரைவில் குவாரி நடத்துவதற்கான லைசன்ஸ் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

9. திரு. மயில்சாமி களியம்பாளையம்

எங்களுக்கு இந்த குவாரியால் எந்த குறையும் இல்லை. அவர்கள் பல ஆண்டுகளாக இந்த தொழிலை செய்து கொண்டுள்ளார்கள். எங்களுக்கு அதனால் எந்த ஆபத்தும் இல்லை. வாகனங்கள் சென்று வருவதற்கோ விவசாய பண்ணை வேலைகளுக்கு சென்று வருவதற்கோ ஆடுமாடுகளை ஓட்டி செல்வதற்கோ எங்களுக்கு பாதுகாப்பாகவே உள்ளது. பாதுகாப்பு குறைபாடு, இதுவரை ஏற்பட்டது இல்லை. அவருக்கு லைசென்ஸ் தருவதில் எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:

அனைவருக்கும் நன்றி வணக்கம். மனு கொடுப்பவர் யாராக இருந்தாலும், இப்போது கொடுக்கலாம். அவை கூட்ட நடவடிக்கைகளுடன் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். இந்த பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டத்தில் தங்கள் கருத்துக்களை பதிவு செய்த, சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும், பொது மக்களுக்கும் மற்றும் இந்த கூட்டத்தை சிறப்பாக நடத்த உதவிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், காவல் துறை நண்பர்களுக்கும், கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் அனைவருக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பிலும் மாசு கட்டுப்பாடு வாரியம் சார்பிலும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்!

**இணைப்பு :**

**மனுக்களின் எண்ணிக்கை –5 எண்ணிக்கை.**

மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
**கோயமுத்தூர் வடக்கு**

தனி மாவட்ட வருவாய் அலுவலர்
நில எடுப்பு, மாநில நெடுஞ்சாலை,
**கோயம்புத்தூர் மாவட்டம்.**